# பட்டதாரிகளின் பலே பப்பாளி – வாழை



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகில், காயாமொழி என்ற இடத்தில் இருக்கிறது சக்திகுமார் தோட்டம். நாலரை ஏக்கர்ல பப்பாளி, 7 ஏக்கர்ல வாழை, மூணரை ஏக்கர்ல காய்கறினு ஒதுக்கி வெச்சுருக்கோம். வழக்கமான முறையில் விவசாயம் செய்யாம பப்பாளி, வாழையை முக்கிய விவசாயமா வெச்சுகிட்டு, சாமந்தி, துவரை, பயறு வகைகள்னு நிலத்தோட ஒரு இடத்தைக்கூட சும்மா வைக்காம உயிர்மூடாக்கு முறையில் விவசாயம் செய்றோம்.

தைவான் ரக விதை, பெங்ளூரு மற்றும் புனே ஆகிய இடங்களில்தான் கிடைக்கிறது. நாங்கள் பெங்களூருவிலிருந்து வாங்கி வந்து நாற்று தயாரித்தோம். 4 7 அளவுள்ள பையில் பப்பாளி விதையை விதைத்து, நிழலில் வைத்து தினமும் இரண்டுவேளை தண்ணீர் தெளித்து, குறைந்தபட்சம் 40 நாட்கள் பராமரிக்க வேண்டும். விதைத்த 10ம் நாளில் முளைக்கத் தொடங்கும். அரையடி உயரத்துக்கு வளர்ந்ததும் பையிலிருந்து எடுத்து. நிலத்தில் நடலாம். நாற்றுப் பையில் வளரும் நேரத்தில் வயல் தயாரிப்புப் பணிகளைச் செய்ய வேண்டும்

நிலத்தை சட்டிக் கலப்பையால் நன்றாக உழுது, பார் பிடிக்காமல் அப்படியே சொட்டுநீர்ப் பாசனக் குழாய்களை அமைத்தோம். தயாரான வயலில் முதலில் தர்பூசணியை நடவு செய்தோம். அதை அறுவடை செய்துவிட்டு பப்பாளியை நட்டோம். (தர்பூசணி நடவு செய்து 25 நாட்கள் கழித்து, பப்பாளி விதைத்து, அந்த நாற்றுகளை 40 நாள் கழித்து நடவு செய்துள்ளனர்). தர்பூசணிக்கு ஜீவாமிர்தம் கொடுத்து வந்தால், முப்பது டன் தர்பூசணி மகசூல் கிடைத்தது. ஜீன் மாதத்தில் பப்பாளியை நட்டோம். கன்றுக்கு கன்று 6 அடியும், வரிசைக்கு வரிசை 9 அடியும் வைத்து நடவு செய்தோம். ஆனால், கன்றுக்கு கன்று 8 அடியும். வரிசைக்கு வரிசை 8 அடியும் வைத்து நட்டால் நல்லது என்பதைப் பிறகுதான் புரிந்துகொண்டோம். பப்பாளியை நடும்போதே

இரண்டு பப்பாளிக்கு இடையில் ஒரு துவரையை நட்டோம். பப்பாளியைப் பொறுத்தவரை தண்டை விட்டு தள்ளித்தான் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தண்டில் தண்ணீர் படுவது போல பாய்ச்சினால் தண்டு அழுகல் நோய் தாக்கும். நோய் வந்தாலும் வராவிட்டாலும் மோர்க்கரைசல் தெளிப்பதை வழக்கமாக வைத்துள்ளோம். நன்றாகப் புளித்த 10 லிட்டர் மோரில், 200 லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் மோர்க்கரைசல் தயாரிக்க வேண்டும். தேவைப்படும் அளவுக்கு தயாரித்து, செடிகள் முழுக்க நனையுமாறு தெளிப்போம். நடவு செய்த 6ம் மாதத்துல பப்பாளி, பூ பூக்கும். 8ம் மாதத்திலிருந்து தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் வரை காய் பறிக்கலாம். சொட்டுநீர்ப் பாசனம் என்பதால், பப்பாளிக்கு மாதம் ஒருமுறை ஜீவாமிர்தத்தை வடிகட்டி, பாசன நீர் மூலமாகக் கொடுக்கிறோம்.

ஜீவாமிர்தம் தயாரிக்க பெரும்பாலும், தேங்காய் தண்ணீர் அல்லது பனம்பழத்தைப் பயன்படுத்துவோம். இதனால் வெல்லத்துக்கு செலவிடும் பணம் மிச்சமாகிறது. மொத்தம் 3,000 பப்பாளிக் கன்றுகளை நடவு செய்துள்ளோம். தற்போது வாரம் 500 கிலோ வீதம், மாதம் இரண்டு டன் மகசூல் கிடைக்கிறது. “நாட்டு வாழை ஈ கதலி, பூவாஞ்செண்டு, ரஸ்தாளி, பச்சை(ரொபஸ்டா) என ஐந்து ரக வாழைகளை ஏழு ஏக்கரில் நடவு செய்துள்ளோம். உயிர்மூடாக்கு முறையில்தான் பப்பாளி, வாழை பயிரிடுகிறோம். இதனால் அதிகமான வெயில், பயிரின் மீது விழாது. வேர்முடிச்சுப் பயறுகள், காற்றிலிருந்து நைட்ரஜனை நிலத்துக்குக் கொண்டு வரும் வேலையைச் செய்கின்றன. அதேபோல, நிலத்திலிருந்து பயிர்களால் சுலபமாக எடுத்துக் கொள்ள முடியாத பாஸ்பேட் சத்துக்களை உடைத்து, இலகுவாக எடுத்துக் கொள்ளும் வகையில் உதவுகிறது கம்புப் பயிர். அதனால் கம்பையும் பரலாக விதைத்துள்ளோம்.

ஊடுபயிராக விதைத்துள்ள அகத்திக்கீரை, வாழைக்கு வைரஸ் நோய் வராமல் தடுக்கிறது. செண்டு, பூ வாழையைத் தாக்கும் நூற்புழுவைக் கட்டுப்படுத்துகிறது. மற்ற பயிர்கள் உயிர்மூடாக்காகப் பயன் தருகின்றன. தட்டைப்பயறை ஜீவாமிர்தத்துக்குப் பயன்படுத்தியது போக, இதுவரை 10 ஆயிராம் ரூபாய்க்கும், செண்டுப்பூவை 4 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்துள்ளோம்.

வாழைக் கன்றுகளைத் தேர்வு செய்யும்போது, நோய் தாக்காத வாழைத் தோட்டத்திலிருந்து, அனைத்துக் கன்றுகளும் சமஅளவு எடையிருப்பது போல பார்த்து தேர்வு செய்ய வேண்டும். நடவுக்கு முன்பாக அவற்றை, விதைநேர்த்தி செய்ய வேண்டும். பசுமாட்டுச் சாணம் 10 கிலோ, கோமூத்திரம் 5 லிட்டர், 2 கைப்பிடி மண், தேவைக்கேற்ப தண்ணீர் இவற்றை ஒரு பிளாஸ்டிக்

டிரம்மில் போட்டு நன்றாகக் கலக்கி, 12 மணி நேரம் நிழலில் வைக்க வேண்டும். விதைநேர்த்தி செய்வதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாக இரண்டு கிலோ சுண்ணாம்பை கலவையில் கொட்டி கலக்க வேண்டும். பிறகு அந்த கலவையில் வாழைக்கன்றின் அடிப்பகுதியை இரண்டு முறை நனைத்து எடுக்க வேண்டும். இது, வேர் சம்பந்தமான நோய்களை தடுக்கும் .

ஏற்கெனவே தயார் செய்த நிலத்தில் வரிசைக்கு வரிசை 5 அடியும், கன்றுக்கு கன்று 6 அடியும் இடைவெளி விட்டு வாழையை நடவேண்டும். வாழைக்கும் சொட்டுநீர் மூலம்தான் தண்ணீர் பாய்ச்சுகிறோம். 15 நாளைக்கு ஒரு தடவை ஜீவாமிர்தம் தெளிப்பதால், நோய்த் தாக்குதல் இல்லாமல் வாழையின் வளர்ச்சி அதிகரிக்கிறது. மூன்றாவது மாதம் வாழை நன்றாக வளர்ந்துவிடும். ஐந்தாவது மாதம் முட்டு கொடுக்கவேண்டும். ஆறாவது மாதம் குலை தள்ளும். அதன்பிறகு தார் விளைய மூன்று மாதம் ஆகும்.

எங்களிடம் உள்ள ஐந்து ரக வாழையிலும் சேர்த்து மொத்தம் 6,800 வாழைகள் உள்ளன. இவற்றின் இலைகளை மொத்தமாக ஒரு லட்ச ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டுள்ளோம். வாழை அறுவடை முடிந்தவுடன் நாருக்காக ஒரு மரத்துக்கு ஒரு ரூபாய் 50 பைசா வீதம் கொடுத்து நாரை உறித்துக் கொள்வார்கள். அந்த வகையில் 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

**தொடர்புக்கு**

சக்திகுமார் - 94443-36353

ஜெயசேகரன் - 94444-90779

காயாமொழி,திருச்செந்தூர் அருகில்,தூத்துக்குடி மாவட்டம்